**கேகாலை நகர சபை - 2022**

--------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கேகாலை நகர சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 181 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கேகாலை நகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 வேலைகளுக்காக 2022 திசெம்பர் 31 அன்று பெற வேண்டிய ரூபா 1,273,439 மற்றும் ரூபா 701,570 ஆன இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சரி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | உடன்படிக்கை கைச்சாத்திடாத ரூபா 1,504,060 ஆன நிர்மாணமொன்று கடன்கொடுனராக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இதனை மேற்கொள்வதனால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| (இ) | 04 வேலைகளுக்காக கடன்கொடுனர் ஏற்பாடு ரூபா 1.915,998 கூடுதலாக ஒதுக்கப்பட்டிருந்தது. | 02 வேலைகள் மட்டுப்படுத்தப்பட்ட டெண்டர் கோரவும், ஒரு வேலையை எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளவும், மற்றைய வேலைக்கு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போதும் கொடுப்பனவு செய்யாததால் கடன்கொடுனர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |

#### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயமொன்றிற்காக நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணை பிரகாரம் அம் மீதிக் கிடையில் ரூபா 6,747,203 ஆன வித்தியாசம் நிலவியது. | சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகள் சரி செய்ய வெண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 217,839,779 ஆன 06 கணக்கு விடயங்களிற்காக அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டவணை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. | கணக்காயிவிற்கு தேவையான தகவல்களை வழங்க வெண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| i நி.பி. 571 | கூட்டுத்தொகை ரூபா 2,462,388 ஆன காலாவதியான 76 வைப்பக்களை தீர்திருக்கவில்லை. | தேவையான வைப்புக்கள் நிறுத்தி வைத்தல் மற்றும் மீதியை மீள் செலுத்துவதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 68,174,562 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 81,741,931 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 11,700,000 | 10,776,862 | 9,603,605 | 4,577,911 | 11,700,000 | 10,208,316 | 9,048,715 | 3,455,333 |
| வாடகை | 54,079,502 | 55,923,825 | 55,092,178 | 4,848,707 | 54,225,300 | 50,135,058 | 39,842,603 | 4,007,694 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,195,500 | 2,362,847 | 2,597,507 | 569,800 | 3,175,500 | 2,725,316 | 2,858,548 | 533,000 |
| ஏனைய வருமானம் | 34,519,500 | 45,340,995 | 38,621,748 | 10,732,082 | 34,119,000 | 3,358,200 | 35,936,592 | 4,576,351 |
| | 103,494,502 | 114,404,529 | 105,915,038 | 20,728,500 | 103,219,800 | 66,426,890 | 87,686,458 | 12,572,378 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் கடை வாடகை ஆகிய வருமான விடயங்களில் 2022 தசெம்பர் 31 திகதியன்று ரூபா 10,623,121 தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. அப்பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலான ரூபா 618,504 ஆன மீதியொன்றும் 05 ஆண்டை விஞ்சிய பழைய ரூபா 5,944,136 ஆன மீதியொன்றும் காட்டப்பட்டது. | ஆதனத் தடை, நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல், வாடகையாளர்களை அகற்றுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக. | நிலுவை வாடகையை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | 1988 மே 17 திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்சி சுற்றறிகைக பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய ஆதன மதிப்பீட்டை 2000 ஆண்டின் பின்னர் மேற்கொண்டிருக்கவில்லை. | ஆதனங்களை மதிப்பீடு செய்து தருமாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்த போதும் அது இடம்பெறவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை அங்கீகரித்த 1100 திட்டங்களில் 996 இற்காக இணக்கப்பாட்டு சான்றிதழ் விநியோகிக்கப்படாததால் அதற்காக அறவிடப்படும் கட்டணம் ரூபா 3,984,000 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | பெறும்பாலான வீடுகள் அங்கீகார திட்டத்திற்கு இணங்காதவாறு நிர்மாணித்துள்ளமை, நிர்மாணங்களை இடைநடுவில் நிறுத்தியுள்ளமை, சட்ட நடவடிக்கைகளுக்காக பெறுந் தொகை | திட்டத்தை அங்கீகரித்த பின்னர் பின்னூட்டல் செயன்முறையை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் இணக்கப்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | பணத்தை செலவிட வேண்டியுள்ளமை, மேற்பார்வை உத்தியோகத்தர்கள் இல்லாமை போன்ற விடயங்கள் இதற்கு காரணமாகவுள்ளதாக. | சான்றிதழ் விநியோகித்து வீதவரி திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அனுமதியற்ற 06 நிர்மாணங்களின் நிர்மாணப் பணிகளை இரத்துச் செய்ய கட்டளை இட்டுள்ள போதும், அக் கட்டளைகளை கவனிக்காது குறித்த நிர்மாணங்களை பூர்த்தி செய்து மற்றும் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. | வழக்கு தீர்ப்பின் பிரகாரம் அவ்வாறான நிர்மாணங்களை உடைத்து அகற்ற எழுத்துமூல கட்டளை வழங்கியுள்ள போதும், அந்நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை இடைநிறுத்த வேண்டும். |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரித்த சபைக்கு சொந்தமான வாடிவீட்டை 2009 ஆண்டின் 1589/20 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மீள் கையளிக்க வேண்டிய போதும், 2022 திசெம்பர் வரையும் கையளித்திருக்கவில்லை. அவ்வாறே, 2020 செப்தம்பர் முதல் 2022 மே வரையான காலத்திற்கு அவ் அதிகார சபையிடமிருந்து ரூபா 1,506,700 ஆன வாடிவீட்டு முகாமைக் கட்டணமும் அறவிட வேண்டியதாக நிலவியது. மேலும், 2009 ஆண்டு முதல் 2015 ஜுலை வரை வெளித்தரப்பினரால் அவ்வாடி வீட்டிலிருந்து வருமானம் ஈட்டியிருந்ததால், அக்காலத்தினுள் நிலுவையான ரூபா 502,026 ஆன கடடணத்தை பதிவழிக்க செய்யப்பட்ட கோரிக்கையின் பொருத்தப்பாடு பிரச்சினைக்குரியதானது. | செலுத்த வேண்டியுள்ள ரூபா 502,026 தொகையை மகா சபை தீர்மனத்தின் பிரகாரம் பதிவழிக்கும் கட்டளைக்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. ரூபா 1,506,700 தொகையை அறவிட குறித்த தரப்பினரிற்கு அறவிக்கப்பட்டுள்ளது. ஆதனத் தடை செய்ய அல்லது வழக்குத் தாக்கல் செய்ய முடியாதுள்ளமை, நிலுவை அறவிட முடியாமைக்கு காரணமாகவுள்ளதாக. | நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரிக்கும் நிபந்தனை பிரகாரம் நிலுவை வாடகை அறவிட வேண்டியதுடன், வர்தமானி அறிவித்தல் பிரகாரம் சொத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும. |
| (ஈ) | மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சு செயலாளரின் ஆலோசனைகளிற்கு இணங்காதவாறு அவ் அமைச்சின் அங்கீகாரமின்றி 2020 ஆண்டிற்கு முன்னர் 1184 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. | அவ் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதாக. | வீதி விளக்குகள் பொருத்த அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்குப் பிரிவின் 04 உத்தியோகத்தர்கள் 08 ஆண்டுகளிற்கும் 13 ஆண்டுகளிற்கும் இடைலான காலமாக ஒரே இடத்தில் சேவையாற்றுகின்றனர். சபையின் 12 | இடமாற்றம் மேற்கொள்வது சபரகமுவ மாகாண பிரதான செயளாலர் அலுவலகம் மற்றும் உள்ளுராட்ச்சி | உள்ளக இடமாற்றம் மேற்கொள்ள வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவுகளில் சேவையாற்றுபவர்களின் சேவை காலம் மீதான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | ஆணையாளர் அலுவலர் அலுவலகத்தினூடாக என. | |
| (ஆ) | கடையறைகளுக்காக உடன்படிக்கை கைச்சாதிடாததனால் ரூபா 243,300 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இக் கடையறைகளுக்காக உடன்படிக்கை கைச்சாதிடப்படவில்லை. | உடன்படிக்கை கைச்சாதிட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 68,432,711 ஆன கடன்கொடுனர் மிதியினுள் 01 ஆண்டிற்கும் 02 ஆண்டிற்கும் இடைலான காலம் பழமையான ரூபா 21,720,502 உம், 03 ஆண்டுகளை விட பழமையான ரூபா 6,900,316 உம் நிலவியன. | ஓராண்டை விஞ்சிய கடன்கொடுனர் மீதியில் ரூபா 9,491,116 தொகை செலுத்தப்பட்டுள்ளதாக. | கடன்கொடுனர் மீதியை தீர்க்க நவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைக்கேற்ப கொள்வனவு செய்யாததனால் 02 ஆண்டுகறிற்கும் 12 ஆண்டுகளிற்குமிடைலான காலத்தினுள் கொள்வனவு செய்த ரூபா 307,265 ஆன 27 டயர்கள் பயனற்று நிலவியது. | 2022 பண்டக கணிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை பயன்பாட்டின்றி வைத்திருக்கக் கூடாது. |
| (ஆ) | தீ அணைப்பு அலகொன்று இல்லாததனால் 2022 மார்ச் மாதம் கிடைத்திருந்த தீ அணைக்கும் வண்டியொன்று 2022 திசெம்பர் வரையும் பயனற்று நிலவியது. | தீ அணைப்பு அலகிற்கு கட்டிடமொன்றை நிர்மாணித்துள்ளதுடன் ஒரே முறையில் நீர்வசதியை பெற்றுக் கொள்ள இடமொன்றை தயார் செய்து கொண்டிருப்பதாக. | - மேற்படி - |
| (இ) | லொரியொன்று, கை டெக்டரொன்று மற்றும் 02 டேலர்கள் 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பயனற்று நிலவியன. | பொருத்தமான வாறு செயற்பட்டு அறிக்கையிடுவதாக. | - மேற்படி - |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் 51 வெற்றிடங்களும், 02 பேர்களின் மிகையும் நிலவியதுடன் 14 பேர்கள் சேவை ஒப்பந்த பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கோரிக்கை இன்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வழங்கியுள்ளதால் மிகை ஏற்பட்டிருந்தது. | தேவைபாட்டின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |